இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 291 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 19 – செவ்வாய்க்கிழமை 02 ஜூன் 2026 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 291 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 19 - Tuesday 02 June 2026 - Madurai 10 Pages ₹ 5.00

பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும்!

த.வெ.க. அரசைக் கண்டித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம்!

தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது!

சேலம், ஜூன் 2 -

தேர்தல் வாக்குறுதிப்படி விவசாயிகளுக்கு பயிர்க் கடன் தள்ளுபடியை முழுமையாக வழங்காத விஜயை கண்டித்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி விவசாயிகளுக்கு பயிர்க் கடன் தள்ளுபடி வழங்காத த.வெ.க. அரசுக்கு எதிராகப் போராட்டங்கள் வெடித்துள்ளன. இதன் ஒரு பகுதியாக தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம், காவிரி உபரி நீர் நடவடிக்கை குழு உள்ளிட்ட பல்வேறு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் சேலத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு 50 சதவீத கடன் தள்ளுபடியை அறிவிப்பை உடனடியாக வெளியிட வேண்டும் என முழக்கங்களை எழுப்பினர். விவசாயத்தை விட விளையாட்டு மிகக் கஷ்டம் எனக் கூறிய ஆதவ் அர்ஜுனாவுக்கும் விவசாயிகள் கடும் கண்டனத்தை தெரிவித்தனர்.

திருப்பூர்

சென்னையில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா விவசாயத்தை விட விளையாட்டு கடினமானது என பேசியிருந்தார். இதற்கு நாட்டின் மக்களுக்கு உணவளிப்பது முக்கியமா? அல்லது விளையாட்டா? என்று திருப்பூரில் விவசாயிகள் கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் பஞ்சம், பசி, பட்டினியால் வாடக் கூடாது என்பதற்காகவே, இயற்கைச் சீற்றங்களான மழை, புயல், வெள்ளம், வாட்டி வதைக்கும் வெயில் என அத்தனையையும் தாங்கி விவசாயிகள் உழைத்து வருகின்றனர். மீள முடியாத கடன் சுமை மற்றும் அதன் காரணமாக ஏற்படும் தற்கொலைகள் போன்ற கொடூரமான வாழ்வாதாரப் போராட்டங்களையும் தினசரி எதிர்கொண்டு வருகின்றனர்.

தேர்தலின் போது பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசி, விவசாயிகளின் வாக்குகளைப் பெற்றுவிட்டு, பின்னர் ஏமாற்றம் என அத்தனையையும் சகித்துக் கொண்டு, உணவு உற்பத்தியை ஒருபோதும் நிறுத்தாமல் விவசாயிகள் தொடர்ந்து பாடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய கடுமையான சூழல்களுக்கு மத்தியில் உழைக்கும் விவசாயத்தைவிட, விளையாட்டுதான் கடினமானது என்று அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசியது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. அதேநேரம் விளையாட்டு வீரர்களை மதிக்கிறோம். விவசாயிகளின் வாழ்வாதார உழைப்பை குறைத்து மதிப்பிடுவதை ஏற்க முடியாது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

நாகப்பட்டினம்

தேர்தல் வாக்குறுதிப்படி கடன் தள்ளுபடி செய்யாத த.வெ.க., அரசை கண்டித்து நாகையில் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தேர்தலில் அளித்த வாக்குறுதியின்படி விவசாய கடனை தள்ளுபடி செய்ய வேண்டும், காவிரியின் குறுக்கே மேகதாதுவில் தடுப்பணை கட்ட நினைக்கும் கர்நாடக அரசின் முயற்சியை தடுத்து நிறுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் மற்றும் தமிழ்நாடு விவசாய சங்கங்கள் கூட்டியக்கம் சார்பில் நாகப்பட்டினம் அவுரிதிடலில் இருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி பேரணியாகச் சென்று மனு கொடுக்கும் போராட்டம் நடைபெற்றது.

பேரணி மற்றும் போராட்டத்திற்கு போலீசார் அனுமதி மறுத்து மறுத்த நிலையில், அதனை மீறி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி விவசாயிகள் பேரணியாகச் சென்றனர். இதில் நாகப்பட்டினம், திருவாரூர், காரைக்கால் மாவட்டங்களை சேர்ந்த 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். த.வெ.க., அரசைக் கண்டித்து முழக்கம் எழுப்பினர். அப்போது, விவசாயிகளை போலீசார் தடுத்து நிறுத்தி கைது செய்ய முயற்சித்தனர். இதனால் வாக்குவாதம் ஏற்பட்டு தள்ளுமுள்ளு உருவானது.

நெல்லை

நெல்லை மாவட்ட விவசாயிகளும் விஜய் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். உரம் பூச்சி மருந்து விலை உயர்வுக்கு ஏற்காடு போல் விலை பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்திட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை ஆட்சியரை சந்தித்து மனு அளிக்க வந்த நிலையில் விவசாயிகளை வண்ணார்பேட்டை பகுதியில் காவல்துறையினர் தடுத்து நிறுத்தினர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து காவல் துறையினருடன் விவசாயிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இதேபோல் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விளை பொருட்களுக்கு உடனடியாக கட்டுபடியாகக் கூடிய வகையில் விலை நிர்ணயம் செய்ய வேண்டும்; உரம், பூச்சி மருந்து விலை உயர்வை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்; கொள்முதல் செய்யப்பட்ட விவசாயப் பொருள்களுக்கு காலதாமதமின்றி பணம் வழங்க வேண்டும்; கூட்டுறவு கடனை முழுவதுமாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை எழுப்பியும், மனுவாக ஆங்காங்குள்ள மாவட்ட ஆட்சியரிடமும் வழங்கியும் தங்களது எதிர்ப்பை விவசாயிகள் பதிவு செய்தனர்.

மின்வெட்டு, குடிநீர் தட்டுப்பாடு:

மின்துறை அமைச்சரை பெண்கள் முற்றுகை!

திருப்பரங்குன்றம், ஜூன் 2 –

திருப்பரங்குன்றம் தொகுதியில் தொடர் மின்வெட்டு, குடிநீர் தட்டுப்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளை கண்டித்து, அமைச்சர் நிர்மல்குமாரை பெண்கள் முற்றுகையிட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மதுரை திருப்பரங்குன்றம் தொகுதிக்கு உட்பட்ட தனக்கன்குளம் ஊராட்சியில் உள்ள வெங்கலமூர்த்தி நகரில், ஊராட்சி பொது நிதியில் இருந்து ஏற்கனவே உள்ள காவிரி கூட்டு குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் கொண்டு செல்ல திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்கான பணிகளை மின்துறை அமைச்சர் நிர்மல்குமார் நேற்று காலை துவக்கி வைத்தார். பின்னர் தேர்தலில் வெற்றிக்காக நன்றி கூற வெங்கலமூர்த்தி நகர் மக்களை சந்திக்க சென்றார்.

அப்போது அப்பகுதி பெண்கள் மற்றும் பொதுமக்கள் அமைச்சரை முற்றுகையிட்டு, "எங்கள் பகுதிக்கு குடிநீரே வருவதில்லை. காசு கொடுத்துத் தான் வாங்கி குடிக்க, குளிக்க முடிகிறது. தெருவிளக்குகள் அனைத்தும் எரியாமல் கிடக்கிறது. அடிக்கடி மின்வெட்டு ஏற்படுகிறது.

கோடைகாலம் என்பதால் வியர்வையிலும், கொசுக்கடியிலும் பெரியவர்கள், குழந்தைகள் தவித்து வருகிறோம்.

மேலும் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களுடன், சமூக விரோதிகள் நடமாட்டம் அதிகரித்திருப்பது, பெண்களுக்கு பாதுகாப்பில்லாத நிலையை ஏற்படுத்தி இருக்கிறது" என்று சரமாரியாக பல்வேறு குற்றச்சாட்டுகளை தெரிவித்தனர்.

பதில் சொல்ல முடியாமல் திணறிய அமைச்சர் நிர்மல்குமார், "தற்காலிகமாக குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் துவங்கி இருக்கிறது" என சமாளித்தார்.

போளூரில் கல்குவாரி

ஊழியரை மிரட்டிய த.வெ.க. எம்.எல்.ஏ.!

சேத்துப்பட்டு, ஜூலை 2 –

போளூரில் கல்குவாரி ஊழியரை த.வெ.க. எம்.எல்.ஏ. மிட்டிய வீடியோ வைரலானதால் பரபரப்பு ஏற்பட்டது. திருவண்ணாமலை மாவட்டம் போளூர், குன்னத்தூர் பகுதியில் அரசு அனுமதி பெற்று இயங்கி வரும் தனியார் கல்குவாரியில் போளூர் தொகுதி த.வெ.க. எம்.எல்.ஏ. அபிஷேக் மற்றும் அவரது ஆதரவாளர்கள் சில தினங்களுக்கு முன்பு திடீரென ஆய்வு மேற்கொண்டனர். அப்போது அங்கு வேலை செய்து கொண்டிருந்த ஊழியர் ஒருவரிடம் ஒரு காகிதத்தை கொடுத்து, அதை வாசிக்குமாறு எம்.எல்.ஏ. கூறியுள்ளார்.

அந்த ஊழியர் இயல்பான தொனியில் நின்று கொண்டிருந்ததை கண்டு ஆத்திரமடைந்த எம்.எல்.ஏ. அபிஷேக், அவரை அதிகார தொனியில் பேசி மிரட்டியுள்ளார். 'இந்த நக்கல் புத்தியெல்லாம் இங்க வச்சுக்காதே! ஏன் ஒழுங்கா நிற்க மாட்டியா? சும்மா அமைதியா போறோம்னு இந்த மாதிரி நக்கல் பண்ணக் கூடாது. இங்க ஒழுங்கா வேலை செய்யணும்னு சொல்றதுக்குத் தான் வந்திருக்கேன். உன் வயது என்ன தம்பி? உன் வயதைத் தாண்டித்தான் நான் வந்திருக்கேன். பணிவா பேசினால்தான் வேலை நடக்கும். உன்னை யாரையும் கெஞ்ச சொல்லல...

ஆனா இந்த மாதிரி நக்கல் காட்டுறதெல்லாம் வேற எங்கயாவது வச்சுக்கோ' என்று அதிகாரத் தோரணையில் பேசி உள்ளார்.

95 ஆண்டுகளை நிறைவு செய்தது சென்னை புறநகர் ரயில் சேவை!

சென்னை, ஜூன் 2 -

சென்னை புறநகர் ரயில் சேவை தொடங்கப்பட்டு நிகழாண்டுடன் 95 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

இதுகுறித்து சென்னை ரயில்வே கோட்டம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு வருமாறு:-

சென்னையின் புறநகர் ரயில் போக்குவரத்துப் பயணம் 1931 ஆம்ஆண்டு தொடங்கப்பட்டது. சுமார் 29 கி.மீ. தொலைவில் கடற் கரைதாம்பரம் இடையே புறநகர் மின்சார ரயில் அறிமுகமானது. இதன்மூலம் தென்னிந்தியாவில் மின்சார புறநகர் ரயில் சேவையைப் பெற்ற முதல் நகரம் என்ற பெருமையை சென்னை பெற்றது. ஆரம்பகட்டத்தில் 'அணா' மதிப்பில் மிகக்குறைவான கட்டணம் மற்றும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ரயில் சேவைகள் மட்டுமே இருந்தன. சிக்கனமான மற்றும் நம்பகமான போக்குவரத்து சேவை நடுத்தர மக்களை அதிக அளவில் ஈர்த்தன.

இதையடுத்து, கடந்த 1985 இல் மின்சார ரயில் சேவைகள் கும்மிடிப்பூண்டி வரை நீட்டிக்கப்பட்டு வடசென்னை புறநகர்ப் பகுதிகளுக்கான இணைப்பு பலப்படுத்தப்பட்டது. தொடர்ந்து, 1985இல் அரக்கோணம் வரையும், பின்னர், தெற்கே செங்கல்பட்டு வரையும் நீட்டிக்கப்பட்டு, சென்னையின் வடக்கு, மேற்கு மற்றும் தெற்கு புறநகர்ப் பகுதிகளை இணைக்கும் ஒட்டுமொத்த ரயில் கட்டமைப்பாக மாறியது.

பறக்கும் ரயில் சேவை: *சென்னையின் நகர்ப்புற ரயில் பயணத்தில் மற்றொரு முக்கிய மைல்கல், பறக்கும் ரயில் திட்டம் ஆகும். சென்னை கடற்கரை மற்றும் சேப்பாக்கம் இடையேயான முதல் பறக்கும் ரயில் வழித்தடம் 1995 இல் தொடங்கப்பட்டது. இந்தச் சேவை படிப்படியாக 1997இல் திருமயிலை வரையும், பின்னர் 2007இல் வேளச்சேரி வரையும் விரிவுபடுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு இந்தச் சேவை பரங்கிமலை வரை விரிவாக்கம் செய்யப்பட்டது.*

தொடக்கக் காலத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சேவைகளுடன் மட்டுமே இயக்கி வந்த சென்னை புறநகர் ரயில்வே, தற்போது தினமும் நூற்றுக்கணக்கான ரயில் சேவைகளுடன் இயக்கி, லட்சக்கணக்கான பயணிகளுக்கு பயனளிக்கும் வகையில் இந்தியாவின் பரபரப்பான போக்குவரத்து அமைப்புகளில் ஒன்றாக விளங்குகிறது.

95 ஆண்டுகள் நிறைவு செய்தும் மிக குறைந்த பட்சக் கட்டணமாக வெறும் ரூ.5 மட்டுமே பயணக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. அதேபோல், பயணிகளின் மாறிவரும் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்யும் வகையில் கடந்த ஆண்டு முதல் கடற்கரைசெங்கல்பட்டு வழித்தடத்தில் குளிர்சாதன புறநகர் ரயில் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது.

பயணிகளின் வசதி, எளிதான அணுகல் மற்றும் நிலையங்களின் அழகை மேம்படுத்தல் தொடர்ந்து பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிர்வாகத் திறமையின்மையா? அல்லது ஏமாற்று வேலையா?

பயிர்க்கடன்: விவசாயிகளுக்கு இழைக்கப்படும் பச்சைத் துரோகம்!

முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம்!

சென்னை, ஜூன் 2 -

"தேர்தல் வாக்குறுதி கொடுக்கும்போது வராத 'ரிசர்வ் வங்கி விதிமுறைகள் இப்போது மட்டும் வருகிறதா? இது நிர்வாகத் திறமையின்மையா? அல்லது திட்டமிட்டு விவசாயிகளை ஏமாற்றும் வேலையா?' என்று முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் த.வெ.க. அரசுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது :-

"தேனைத் தடவித் தேர்தல் வாக்குறுதி கொடுக்கும்போது வராத 'ரிசர்வ் வங்கி விதிமுறைகள்', மக்களை ஏமாற்றி ஆட்சிப் பொறுப்பில் உட்கார்ந்து கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற நிலை வரும்போது மட்டும் எங்கே இருந்து திடுமெனக் குதித்து வருகின்றன? இது நிர்வாகத் திறமையின்மையா? இல்லை திட்டமிட்ட ஏமாற்று வேலையா?

இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல் நடைமுறைகளின்படிதான் "கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது" என்று தமிழ்நாடு நிதியமைச்சர் அண்மையில் விளக்கம் சொல்லியிருக்கிறார். கடன் தள்ளுபடி செய்யப்படுவதாக அரசின் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளவாறு ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல் என்பது கடந்த ஆண்டு 28.11.2025 அன்றே வழங்கப்பட்டுள்ளது.

வாக்கு அறுவடை!

அந்த வழிகாட்டுதலை முழுமையாகத் தெரிந்துகொண்ட பின்னர்தான் 16.4.2026 அன்று த.வெ.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், "ஐந்து ஏக்கருக்குள் நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்க்கடன் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். ஐந்து ஏக்கருக்கு மேல் வைத்துள்ள விவசாயிகளின் பயிர்க்கடன் 50 விழுக்காடு தள்ளுபடி செய்யப்படும்" என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆகவே, தெளிவாகத் தெரிந்து கொண்டே வாக்குறுதியைத் தந்து, "வாக்கு அறுவடை" முடிந்ததும் இப்போது ரிசர்வ் வங்கியைக் காரணம் காட்டி மறுப்பது விவசாயிகளை முற்றிலும் ஏமாற்றுவதாகும்.

பொய்யான வாக்குறுதி!

எனவே, தேர்தலுக்கு முன்னர் அளித்த வாக்குறுதிப்படி, இந்த அரசின் முதல் நிதிநிலை அறிக்கையிலேயே விவசாயிகளின் பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்யும் அறிவிப்பினை வெளியிட வேண்டும். பொய்யான வாக்குறுதிகளை விவசாயிகளுக்கு வழங்கி அவர்களுக்கு நம்பிக்கையூட்டிவிட்டு, இப்போது அரைகுறையாக எந்த விவசாயிக்கும் பயனளிக்காத வகையில், பயிர்க்கடன் தள்ளுபடி செய்திருப்பதாகச் சொல்வது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இழைக்கப்படும் "பச்சைத்" துரோகமாகும்!"

இவ்வாறு முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தெரிவித்துள்ளார்.